DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No.13 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகரத்தினம் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | குமாரசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | கொளத்துப் பாளையம் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 16.04.2021.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரியின் நிறுவனம் பங்குதாரர் நிறுவனம் ஆகும். எத்தனை பங்குதாரர்கள் இருக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. பங்கு தாரர் நிறுவனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. பங்குதாரர் நிறுவனத்தில் எதிரி என்ன பொறுப்பில் உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. எதிரியின் பங்குதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலக முகவரி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் நிறுவனத்தின் தொழிலுக்கும் எனது தொழிலுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. வழக்கு காசோலை தனிநபர்

காசோலையா அல்லது நிறுவன காசோலையா என்ற விபரம் எனக்கு தெரியும். தனி நபர் காசோலைதான் ஆகும். எதிரி நிறுவனத்திற்கும் எனக்கும் எவ்வித வரவு செலவும் இல்லை. காசோலை என்ன வகையான கணக்கிற்கு உரியது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சேமிப்பு கணக்கு ஆகும். எதிரி நிறுவனத்தில் அன்றாட வரவு செலவுகளை யார் பார்த்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட் நிறுவனத்திற்கும் எனக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். நான் என்னுடைய அறிவிப்புலும், புகாரிலும் எதிரி பொன்னழகு எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் உரிமையாளர் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி நிறுவனம் தனி உரிமையாளர் நிறுவனம் இல்லை என்றாலும், பாட்னர் சிப் நிறுவனம் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. ம.சா.ஆ.4 அறிவிப்பில் ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு தனியாகவும், எதிரி பெயரில் தனியாகவும், காட்டி அறிவிப்பு கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி எனக்கு ஒரு பதில் அறிவிப்பு கொடுத்தார். நீண்ட நாட்கள் கழித்துதான் கொடுத்தார். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பின் விபரங்கள் எனக்கு தெரியும். எதிரியின் நிறுவனம் பங்கு தாரர் நிறுவனம் என்று காட்டி பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். அதன் பின்னிட்டு கூடுதல் நிரூபண வாக்குமூலம் எதுவும் நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. புகாரில் பொன்னழகு எக்ஸ்போர்ட் நிறுவனத்தை தனியாக கட்சி சேத்திருக்கிறேனா என்றால் இல்லை. என் மகன் பெயர் அருண்குமார் ஆகும். என் மகன் கோவையில் ஐடி கம்பெனியில் வேலை செய்து வருகிறார். எனக்கும் முத்தூர் சாலையில் உள்ள பெரியசாமி என்பவருக்கும் நல்ல பழக்கம் உண்டு.

எஸ் டி சி. 13 /2019, 16.04.2021 P.W.1 முதல் விசாரணை தொடர்ச்சி

பெரிய சாமி அடிக்கடி எனது வீட்டிற்கு வருவார் என்றால் சரிதான். அவருடன் எதிரியும் என் வீட்டிற்கு வருவார். எதிரி என் வீட்டிற்கு வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கும் பெரியசாமிக்கும் நல்ல பழக்கம் உண்டு. எதிரியும் பெரியசாமியும் நன்கு பழக்கமான நபர்கள் ஆவார்கள். கடந்த 03.03.2017 தேதியன்று எதிரி என் மகனிடம் ரூ.1,50,000/– பெற்றிருக்கிறார் என்றால் சரிதான். அத்தொகையை நான் தான் என் மகனுக்கு கொடுத்தேன். என்னுடைய வங்கிக் கணக்கில் இருந்து தான் தொகை பரிமாற்றம் செய்யப்பட்டது. மேற்காணும் தொகைக்கு நாள் ஒன்றுக்கு ரூ.375/– வட்டியாக நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் இல்லை. இது தவறாகும். அவ்வாறு தொகை எதிரி வாங்கிய போது, என் மகனிடம் வழக்கு காசோலை மற்றும் தமிழ் நாடு மெர்கண்டைல் வங்கி காங்கயம் கிளை காசோலை எண் 004467, 004468 ஆகியவற்றையும், எதிரி மற்றும் அவரது தகப்பனார் மற்றும் தாத்தா பெயரில் ஆன வீட்டு இடத்தின் அசல் கிரைய பத்திரங்களை என் மகனிடம் செக்யூரிட்டிக்காக கொடுத்தும், எதிரி தொகை திரும்ப செலுத்திய பின்பு வட்டி சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, அதனால் காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்ய வேண்டாம் என்று எதிரி என் மகனுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. காசோலை தொகையான ரூ.6,00,000/– கொடுக்கும் அளவிற்கு எனக்கு எத்தகைய வசதி வாய்புகளும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வருமானத்தை காட்டும் ஆவணங்கள் அல்லது நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்ற ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். என்னுடைய வருமான வரி கணக்கில் எதிரிக்கு

கொடுத்த தொகையை கணக்கில் காட்டியிருக்கிறேனா என்றால் இல்லை. என் மகன் என் குடும்பத்தை கவணித்து வருகிறார் என்றால் இல்லை. எனக்கும் தனிப்பட்ட வருமானம் இருக்கிறது. நான் எனது மகனின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் தான் இருக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 காசோலையில் மாதமானது திருத்தப்பட்டுள்ளது என்றால் எதிரிதான் காசோலை கொடுத்தார் என சாட்சி பதில் அளிக்கிறார். திருத்தங்கள் இருப்பதாகத்தான் தெரிகிறது. திருத்தப்பட்ட தேதியானது 12.09.2018 என்றால் சரிதான். நானாகத்தான் 12.07.2018 என்பதை 12.09.2018 என்று திருத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காசோலையை 29.10.2018 தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்திருக்கிறேன். தேதியை திருத்தி நான் வசூலுக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இல்லை. எதிரி என்னிடம் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கியிருந்தால், தனி நபர் காசோலைதான் கொடுத்திருப்பார் என்றாலும், எதிரி என்னிடம் எப்போதும் பணம் வாங்க வில்லை என்றாலும், காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் ஸ்ரீ பொன்னழகு எக்ஸ்போர்ட் நிறுவனத்தை தனியாக கட்சி சேர்க்காததால் வழக்கு பாதிப்படைகிறது என்றால் சரியல்ல. எதிரியின் குடும்ப விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. என் மகனுடன் எதிரிக்கும் இருந்த வரவு செலவில், என் மகனிடம் எதிரி செக்யூரிட்டிக்காக கொடுத்திருந்த காசோலையை, என் பெயரில் மோசடியாக நிரப்பி எதிரி மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.